பொதுப்பணித்துறை

கட்டடங்கள்

# மக்கள் சாசனம்

# 2016

©
தமிழ்நாடு அரசு

2016

# பொதுப்பணித்துறை
# கட்டடங்கள்

## மக்கள் சாசனம் – 2016

## 1.0. முன்னுரை :

தமிழ்நாடு பொதுப்பணித்துறை இந்தியாவில் உள்ள பழமையான பொறியியல் துறைகளில் ஒன்றாகும். இந்த மக்கள் சாசனத்தில், பல்வேறு அரசுத் துறைகளின் பொதுக் கட்டடங்களை கட்டி பராமரிக்கும் சேவைகள் குறித்த பொதுப்பணித்துறையின் நோக்கம், பணிகள் மற்றும் பொதுமக்களுக்கான தகவல்கள் ஆகியவை விரிவாக தெரிவிக்கப்பட்டுள்ளன.

## 2.0. துறையின் நோக்கம் மற்றும் செயல்பாடுகள்

கடந்த 158 ஆண்டுகளாக பொதுமக்களுக்கு சேவை செய்து வரும் இத்துறை, மிகச்சிறந்த நடைமுறைகள் மற்றும் மேம்பட்ட நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி மக்களுக்கு பாதுகாப்பான மற்றும் தேவைக்கேற்ற பொதுக் கட்டடங்களை நியாயமான செலவில் கட்டித்தரும் தரமான முக்கிய பணியை செய்து வருகிறது.

இத்துறை பொதுக் கட்டடங்களை திட்டமிட்டு, வடிவமைத்து, கட்டுமானப் பணியுடன் பராமரிப்பு பணியும் செய்வதுடன், பொதுக் கட்டடங்களின் உறுதித் தன்மையை கண்காணித்தலும் இத்துறையின் பொறுப்புகளாகும்.

மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரிகள், பள்ளிகள், மாணவர்களுக்கு தங்கும் விடுதிகள், நீதிமன்றக் கட்டடங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் பிற துறைகளுக்கான அலுவலகக் கட்டடங்கள் உட்பட பலவகையான பொதுக் கட்டடங்கள் இத்துறையின் மூலம் கட்டப்படுகின்றன.

மேலும், பிற அரசுத் துறை நிறுவனங்களின் வேண்டுகோளின் அடிப்படையில், கட்டடங்கள் தொடர்பான நம்பத்தக்கதான சிறப்பறிவுத்திறன் கருத்துரையை பொதுப்பணித் துறை வழங்கி வருகிறது.

பொதுப்பணித் துறையின் இதர செயல்பாடுகள் பின்வருமாறு :–

- மணிமண்டபங்கள், நினைவகங்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் போன்றவைகளை அமைப்பதற்கான கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுதல்.

- பாரம்பரிய கட்டடங்களை அவற்றின் கலை, எழில், வரலாறு மற்றும் தொல்லியல் மதிப்புகளைப் பாதுகாத்து புதுப்பித்து மறுசீரமைக்கும் பணிகள்.

- தலைமைச் செயலகம், சென்னை மற்றும் உதகமண்டலத்திலுள்ள ஆளுநர் மாளிகை, மாண்புமிகு நீதிபதிகள், மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மிக மிக முக்கிய பிரமுகர்களுக்கான மாளிகைகள், ஆய்வு மாளிகைகள், சுற்றுலா மாளிகைகள் மற்றும் பிற அரசு கட்டடங்களைப் பராமரித்தல்.

- கடலோரப் பகுதி பேரிடர் பாதிப்பு குறைப்புத் திட்டம் உள்ளிட்ட இயற்கைப் பேரிடர் மறுகட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுதல்.

- பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதி ஒதுக்கீட்டின்கீழ் உள்ளூர் மேம்பாட்டுத் திட்டப் பணிகளை மேற்கொள்ளுதல்.

- மிக முக்கிய பிரமுகர்கள் மற்றும் மிக மிக முக்கிய பிரமுகர்களின் வருகையின் போது மேடை அமைப்பு, தடுப்பு அமைப்புகள், ஒலி ஒளி அமைப்பு மற்றும் உறுதித்தன்மை சான்று அளித்தல்.

- நீதித்துறை மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறையினால் கோரப்படும் உள்ளூர் கட்டட மதிப்பீடுகளை தயாரித்தல்.

- திரையரங்குகள், கல்லூரிகள் மற்றும் பள்ளிக் கட்டடங்களுக்கு கட்டட உறுதித்தன்மை சான்று வழங்குதல்.

- அரசுத் துறைகள் இயங்கிவரும் தனியார் மற்றும் அரசுக் கட்டடங்களுக்கு நியாய வாடகை சான்று வழங்குதல்.

- ஒவ்வொரு ஆண்டும் செந்தர விலை விகிதப் பட்டியல் மற்றும் கட்டட தளப்பரப்பு விலைவிகிதப் பட்டியல் தயாரித்தல்.

## 3.0. பொதுப்பணித்துறையின் அமைப்பு :

கட்டடங்கள் அமைப்பு, முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை–5 அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் மூன்று மண்டலங்களாக இயங்குகிறது :–

- தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம், சென்னை,
- தலைமைப் பொறியாளர் (கட்டடம்), திருச்சி மண்டலம், திருச்சி மற்றும்
- தலைமைப் பொறியாளர் (கட்டடம்), மதுரை மண்டலம், மதுரை.

முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் பிற பொதுப்பணித்துறை அலுவலகங்கள் பின்வருமாறு :

- தலைமைக் கட்டடக் கலைஞர், சேப்பாக்கம், சென்னை–5
- திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம், சேப்பாக்கம், சென்னை–5 மற்றும்
- இயக்குநர், பொதுப்பணி பணியாளர் பயிற்சி நிலையம், திருச்சிராப்பள்ளி

கட்டடங்களுக்கான திட்டம் மற்றும் வடிவமைப்பு தொடர்பான செயல்பாடுகள் மாநிலம் தழுவிய அளவில் மையப் படுத்தப்பட்டு சீரான முறையில் அமைவதற்கு சென்னையில் இரண்டு தனிப்பிரிவுகள் இயங்கி வருகின்றன. அவ்வகையில் ''கட்டடக் கலைப் பிரிவு'' கட்டடங்களுக்கான வரைகலைப் படங்களை தயாரிக்கிறது. ''திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம்'' கட்டட வடிவமைப்பு மற்றும் வரைபடங்களை தயாரிக்கிறது.

மாநிலம் முழுவதும் பல்வேறு இடங்களில் உள்ள பொதுப்பணித் துறையின் மண்டல வட்டங்கள் மற்றும் கோட்டங்கள் மூலமாக விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தங்கள் கோரப்பட்டு, கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சென்னை, திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் கண்காணிப்புப் பொறியாளர்கள் (மின்) ஆகிய 3 வட்டங்கள், அவர்களின் கட்டுபாட்டின்கீழ் செயல்பட்டு வரும் 8 கோட்டங்கள் மின் பணிகளை மேற்கொள்கிறது.

ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, செயற்பொறியாளர் ஒருவரின் தலைமையில், சென்னையில் தமிழக அரசு கட்டட ஆராய்ச்சி நிலையம் இயங்கி வருகிறது.

பொதுப்பணித்துறை கட்டட அமைப்பின் தலைமைப் பொறியாளர்கள் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர்களின் அலுவலக முகவரி மற்றும் தொலைபேசி எண்கள் பிற்சேர்க்கை–Iல் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 4.0. அரசுத் துறைகளுக்கான சேவைகள்:

பொதுப்பணித்துறையின் சேவைகளின் மூலம் பின்வரும் அரசுத் துறைகள் பயன் பெறுகின்றன :–

- மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை

- பள்ளிக் கல்வித் துறை
- வருவாய்த் துறை
- நீதித் துறை
- போக்குவரத் துறை
- வேளாண்மை துறை
- பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை
- சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலைங்கள் துறை
- வணிகவரி மற்றும் பதிவுத் துறை
- கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை
- தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
- தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை
- சட்டத் துறை
- தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை
- கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை
- சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை
- நிதித்துறை (சம்பளக் கணக்கு அலுவலகங்கள் மற்றும் கருவூலங்கள்)
- கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை
- தொழில் துறை
- சமூக நலம் மற்றுத் சத்துணவுத் திட்டத் துறை
- மாற்றுத் திறனாளிகள் நலத்துறை
- இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

**4.1. கட்டடப் பணிகளை துவங்குவதற்கான நடைமுறைகள்**

அரசுத் துறைகள் புதிய கட்டடங்களை உருவாக்குவதற்கான கோரிக்கையின் அடிப்படையில் முதனிலை வரைபடங்கள் மற்றும் தோராய மதிப்பீடு ஆகியவை அரசுக்கு அனுப்பப்பட்டு புதிய கருத்துருக்களுக்கு நிர்வாக ஒப்பளிப்பு பெறப்பட வேண்டும். அவ்வாறு அரசின் நிர்வாக ஒப்பளிப்பு பெறப்பட்டபின், விரிவான வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, பணிகள் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

**5.0. பொதுப்பணித் துறை மூலம் பணிகளை செயல்படுத்துவதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த சேவைகள்**

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விதிகள் 2000ன்படி, இத்துறை ஒப்பந்தப்புள்ளிகளை விளம்பரப்படுத்தி, இறுதி செய்து பதிவு செய்த ஒப்பந்தக்காரர்களுக்கு கட்டடப் பணிகளை வழங்கி, கட்டுமானப் பணிகளை செயல்படுத்துகிறது.

**5.1. பொதுப்பணித் துறையில் ஒப்பந்தக்காரர்களுக்கான பதிவு :**

அரசுப்பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்வதற்கான விதிமுறைகள் தமிழ்நாடு பொதுப்பணித்துறை விதித் தொகுப்பின் பிற்சேர்க்கை-XXIIIல் இடம் பெற்றுள்ளன. ஒப்பந்தகாரர்களின் நிதி நிலைமை, அனுபவம் போன்றவற்றின் அடிப்படையில் அந்தந்தப் பகுதியின் கண்காணிப்புப் பொறியாளர்கள் (மாநில அளவில் / வட்ட அளவில்) மற்றும் செயற்பொறியாளர்களால் கோட்ட அளவில் பொருத்தமான வகைப்பாட்டின் கீழ் ஒப்பந்தக்காரராக பதிவு மேற்கொள்ளப்படுகிறது.

**ஒப்பந்தக்காரர் வகைப்பாடு :**

பொதுப்பணித்துறையில் ஒப்பந்தக்காரர்கள் தங்களுடைய தகுதிகேற்றவாறு பணியின் மதிப்பை பொறுத்து பின்வரும் வகைப்பாடுகளில் பதிவு செய்து கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| வகைப்பாடு I | : | ரூ.75.00 இலட்சங்களுக்கு மேல் |
| வகைப்பாடு II | : | ரூ. 75.00 இலட்சம் வரை |
| வகைப்பாடு III | : | ரூ. 30.00 இலட்சம் வரை |
| வகைப்பாடு IV | : | ரூ. 15.00 இலட்சம் வரை |
| வகைப்பாடு V | : | ரூ. 6.00 இலட்சம் வரை |

**விண்ணப்பக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| கோட்ட அளவில் | : | ரூ. 1000 + மதிப்பு கூட்டு வரி |
| வட்ட அளவில் | : | ரூ. 1000 + மதிப்பு கூட்டு வரி |
| மாநில அளவில் | : | ரூ.5000 + மதிப்பு கூட்டு வரி |

**பதிவுக் கட்டணம்**

| | |
|---|---|
| கோட்ட அளவில் (வகைப்பாடு-V) | – ரூ.10,000/– |
| வட்ட அளவில் (வகைப்பாடு-V, IV, III, II மற்றும் I) | – ரூ.20,000/– |
| மாநில அளவில் (வகைப்பாடு-IV, III, II மற்றும் I) | – ரூ.50,000/– |

**ஒப்பந்தக்காரராக பதிவு செய்வதற்குரிய இன்றியமையா தகுதிகள்**

- வருமானவரித் துறையில் தாக்கல் செய்யப்பட்ட வருமான வரி விபரஅறிக்கை மற்றும் நிரந்தர கணக்கு எண்.
- தமிழ்நாடு மாநில அரசின் விற்பனை வரி நிர்ணய எண் (TIN)
- ஒப்பந்தக்காரர், தேர்ந்தெடுக்கும் வகைப்பாட்டின் 30 சதவீதத்திற்கு குறையாத வகையில் வருவாய்த் துறை வழங்கும் அசையா சொத்துக்களுக்கான சொத்து மதிப்புச் சான்றிதழ் பெறப்பட்டிருக்க வேண்டும். சொத்து மதிப்புச் சான்றிதழ், பதிவு செய்ய விரும்பும் தனி நபர் பெயரிலோ அல்லது நிறுவனமாக இருப்பின் பங்குதாரருடைய பெயரிலோ பெறப்பட்டிருக்க வேண்டும்.
- பணிகளை மேற்கொள்வதற்காக நிதி நிலைமையை அறிய, வங்கியில் ஒப்பந்தக்காரர் கடந்த ஒரு வருடத்தில் வங்கியில் மேற்கொண்ட பணப் பரிமாற்றம் குறித்த சான்றிதழ்.
- கட்டுமானப் பணிகளில் அனுபவம்.
- ஒப்பந்தக்காரரிடம் உள்ள கருவிகள் மற்றும் தளவாடங்கள் பற்றிய விவரங்கள்.
- ஒப்பந்தக்காரரிடம் உள்ள பணிகளை மேற்பார்வை செய்வதற்கான தொழில்நுட்ப பணியாளர்கள்.

சொத்து மதிப்புச் சான்றிதழ், அனுபவம் மற்றும் கடந்த கால செயல்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் அடுத்த வகைப்பாட்டிற்கு உயர்த்துவது நிர்ணயிக்கப்படும்.

ஒப்பந்தக்காரர் ஒரு வகைப்பாட்டில் குறைந்த பட்சம் ஒரு வருடம் செயல்பட்டிருந்தால் மட்டுமே வகைப்பாடு IV, III மற்றும் II போன்ற அடுத்த உயர் வகைப்பாட்டில் பதிவு செய்ய இயலும்.

**பதிவுக் கட்டணம் செலுத்த வேண்டிய கணக்குத் தலைப்பு**

8782 – Cash Remittance – PW Other Remittance in items adjustable by Public Works and the credit of Executive Engineer, PWD., Division. (D.P. Code No.8782 - R - ACAD – 0003)

**விண்ணப்பங்களை நிராகரித்தல் :** விண்ணப்பத்தை பதிவு செய்யும் அதிகாரம் உள்ளவருக்கு, பதிவு செய்வதற்காக பெறப்பட்ட எந்த விண்ணப்பத்தையும் நிராகரிக்க முழு உரிமை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு நிராகரிக்கும் நிலையில், நிராகரிப்புக்கான காரணங்களை சுருக்கமாக தெரிவித்து விண்ணப்பதாரருக்கு காரணம் கேட்புக் கடிதம் அனுப்பப்பட வேண்டும்.

**வகைப்பாட்டில் இறக்கம் :** பதிவு செய்யும் அலுவலர், ஒப்பந்தக்காரரை வகைப்பாடு இறக்கம் செய்யலாம். அவ்வாறு வகைப்பாடு இறக்கம் செய்தாலும் ஒப்பந்தக்காரரின், விளக்கத்தைப் பெற்று தகுதியின் அடிப்படையில், அவரை மீண்டும் அதே வகைப்பாட்டில் பதிவு செய்யவும் கருதலாம்.

**எளிதான மற்றும் பாரபட்சமற்ற அணுகுமுறை :** அரசால் அவ்வப்போது வெளியிடப்படும் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் செயற் பொறியாளர்கள் பாரபட்சமற்ற முறையில் நடந்து கொள்ள வேண்டும்.

**சேவையை நிறைவாக பெறுவதற்கு இத்துறையின் எதிர்பார்ப்பு :** மேற்குறிப்பிட்ட சேவையை பெற விரும்புவர்கள், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்தை அதனுடன் தேவைப்படும் மதிப்பிற்கான சொத்து மதிப்புச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், வருமானவரி அறிக்கை தாக்கல் செய்ததற்கான ஆதாரங்கள், விற்பனைவரி பதிவுச் சான்றிதழ், நிதித் திறன் குறித்த ஆதார விவரங்கள், அவர்களிடமுள்ள பணியாளர் திறன் மற்றும் இயந்திரங்களின் விவரங்கள் ஆகியவற்றை கண்காணிப்புப் பொறியாளரிடம்

அல்லது செயற் பொறியாளரிடம் உண்மைத் தன்மையை சரிபார்த்திட சமர்ப்பிக்க வேண்டும்.

**குறைகளைக் களைதல் :** குறைபாடுகள் எதுவாக இருந்தாலும் அந்தந்த கண்காணிப்புப் பொறியாளர் அல்லது செயற் பொறியாளரை தொடர்பு கொண்டு தீர்வு காணலாம்.

## 5.2. ஒப்பந்தப்புள்ளி அட்டவணை வழங்குவதற்கான நடைமுறைகள்:

**தகவல்கள் :** ஒப்பந்த அடிப்படையில் இத்துறையில் கட்டடம் கட்டும் பணி அல்லது பராமரிப்புப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அளிப்பதற்கு தேவையான ஆவணங்களை ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் அவ்வப்போது வழங்குவார்.

**சேவையின் தரம் :** பொது மக்களுக்கு வழங்கப்படும் சேவை குறித்த விபரங்கள் பின்வரும் வழிகளில் தெரிவிக்கப்படும் :–

அரசால் வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி தமிழ் மற்றும் ஆங்கில செய்தித் தாள்களிலும், குறிப்பிட்ட இணையதளத்தின் மூலமும் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு விளம்பரம் செய்யப்படுகிறது.

சென்னை, தலைமைச் செயலகம், மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் வெளியிடும் வாராந்திர ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் அல்லது அந்தந்த மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் வாரத்திற்கு இருமுறை வெளியிடும் ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் பணியின் மதிப்பைப் பொறுத்து ஒப்பந்தப்புள்ளி அழைப்பு வெளியிடப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அந்தந்த பொதுப்பணித்துறை அலுவலகங்களில் உள்ள தகவல் பலகையிலும் காட்சிக்கு வைக்கப்படும்.

பதிவு செய்த ஒப்பந்தக்காரர்களுக்கு, அவர்களின் வேண்டுகோளின் அடிப்படையில் அஞ்சல்வில்லை ஒட்டப்பட்ட சுய முகவரியிட்ட உறையில் தபால் மூலம் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு அனுப்பி வைக்கப்படும்.

**கலந்தறிதல் மற்றும் தேர்வு செய்தல் :** இச்சேவையைப் பற்றிய விவரங்களை ஒப்பந்தப்புள்ளி அழைப்பு விடும் அலுவலரிடம் பெறலாம்.

**ஒப்பந்தப்புள்ளி குறித்த குறைபாடுகள் தீர்வு :** அந்தந்த ஒப்பந்தப்புள்ளி அழைப்புவிடும் அலுவலரை தொடர்பு கொள்வதன் மூலம் குறைகளை தீர்வு செய்யலாம்.

**விலை மதிப்பு :** ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை பற்றிய தகவல் கிடைத்தவுடன், ஒப்பந்தக்காரர் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அட்டவணை, பெறுவதற்காக எழுத்துமூலம் வேண்டுகோள் அளிப்பதுடன், உரிய தொகைக்கான வங்கி செலுத்து சீட்டு / கேட்பு காசோலை மூலம் செலுத்த வேண்டும். அவ்வாறு வேண்டுகோள் கடிதம் உரிய கட்டணத்துடன் பெறப்பட்டவுடன், ஒப்பந்தப்புள்ளி அட்டவணை ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்படும்.

மேற்கொள்ளப்படவுள்ள பணியின் மதிப்பின் அடிப்படையில், செலுத்தவேண்டிய தொகை மற்றும் செலுத்தும் வழிமுறை பற்றி ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையிலேயே குறிப்பிடப்படும்.

**ஒப்பந்தப்புள்ளிகளுக்கான அழைப்பு :** அரசாணை (நிலை) எண். 222, பொதுப்பணி (ஜி2) துறை, நாள் 08.04.1999 மற்றும் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விதிகள் 2000, விதி 20ன்படி, செய்தித் தாள்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி இதழ் ஆகியவற்றில் விளம்பர அறிவிக்கை நாளுக்கும், ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கான கடைசி நாளுக்கும் இடையே உள்ள குறைந்த பட்ச கால அளவு விவரங்கள் பின்வருமாறு :

- ரூ.2.00 கோடிக்கு வரை மதிப்பிலான ஒப்பந்தப்புள்ளிகளுக்கு 15 நாட்கள்
- ரூ.2.00 கோடிக்கு மேல் உள்ள ஒப்பந்தப்புள்ளிகளுக்கு 30 நாட்கள்

## 5.3. ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்வதற்கான கால அளவு

அரசாணை (நிலை) எண். 873, பொதுப்பணித் துறை, நாள் 04.05.1982 மற்றும் அரசாணை (நிலை) எண். 49, நிதி (சம்பளங்கள்) துறை, நாள் 11.09.1998ன்படி, ஒப்பந்தப்புள்ளிகளை பரிசீலனை செய்து ஒப்புதல் அளிக்கும் அதிகாரிக்கு சமாப்பிக்க பின்பற்ற வேண்டிய கால அளவு விவரங்கள் பின்வருமாறு

ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குள் கருத்துருக்களை ஆய்வு செய்து கண்காணிப்புப் பொறியாளர், தலைமைப் பொறியாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

கண்காணிப்புப் பொறியாளரிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்ட நாளிலிருந்து 7 நாட்களுக்குள் கருத்துருக்களை ஆய்வு செய்து, தலைமைப் பொறியாளர் ஒப்பந்தப்புள்ளி ஒப்புதல் அளிக்கும் குழுவின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளி ஒப்புதல் அளிக்கும் குழு ஒரு மாத காலத்திற்குள் ஒப்பந்தப்புள்ளி வழங்குவது பற்றிய முடிவினை அளிக்க வேண்டும்.

## 5.4. பணிகளை செயல்படுத்துவதற்கான கால அளவு

தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை அவர்களின் கடித எண். தவஅ (அ) / 24179 / 2002–1, நாள் 22.04.2002ல் உள்ள வழிகாட்டுதல்களின்படி, கட்டடப் பணிகளை செயலாற்றுவதற்கான கால அளவு (ஒப்பந்தக்காரருக்கு பணித்தளம் ஒப்படைக்கப்பட்ட நாளிலிருந்து பணி முடியும் நாள் வரை) பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | கட்டடத்தின் வகைப்பாடு | மொத்த தளப்பரப்புக்கு உரிய கட்டுமான காலம் (மாதங்களில்) | | |
|---|---|---|---|---|
| | | 500 சதுர மீட்டர் வரை | 501 சதுர மீட்டர் முதல் 1000 சதுர மீட்டர் வரை | 1001 சதுர மீட்டர் முதல் 2500 சதுர மீட்டர் வரை |
| 1 | ஒருதள சுவர் கட்டுமானங்கள் | 4 | 7 | 10 |
| 2 | அடுக்குமாடி தூண் அமைப்பு கட்டுமானங்கள் | 5 | 9 | 12 |

எனினும், மேற்படி கால அளவுகளை, தற்செயலான எதிர்பாரா சூழ்நிலைகளின் காரணமாக உயர் அலுவலர்களின் ஒப்புதலோடு மட்டுமே மாறுதல் செய்யலாம்.

2500 சதுர மீட்டருக்கும் அதிகமாக மொத்த தளப்பரப்பு கொண்ட (சிறப்பு வகை) கட்டடங்களுக்கான கால அளவு தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களின் ஒப்புதலோடு மட்டுமே முடிவு செய்யப்பட வேண்டும்.

## 6.0. பிற சேவைகள்:

## 6.1. புதிய திரையரங்குகளுக்கான உறுதித் தன்மை சான்று வழங்குதல்

அரசாணை (நிலை) எண்.972, பொதுப்பணித்துறை, நாள் 13.07.1992 மற்றும் தமிழ்நாடு திரைப்பட (ஒழுங்குமுறை) விதிகள், 1957–ன் அடிப்படையில்,

திரையரங்குகளுக்கான வரைபடங்களின் ஒப்புதல் மற்றும் பரிந்துரையுடன், கட்டட உறுதித்தன்மை சான்றினை உரிமம் வழங்கும் அலுவலருக்கு அனுப்பும் பணியை திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம் மேற்கொள்கிறது.

புதிய திரையரங்குகளுக்கான உறுதித் தன்மை சான்று வழங்குவதற்கான கோரிக்கை சென்னையில் உள்ள காவல் ஆணையர் மற்றும் இதர மாவட்டங்களில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆகிய உரிமம் வழங்கும் அலுவலர்களிடமிருந்து பெறப்படுகின்றன.

அவ்வாறு கோரிக்கைகள் பெறப்பட்டபின், கண்காணிப்புப் பொறியாளர், திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம் அவர்கள் புதிய திரையரங்குகள் / பேரங்காடிகளுடன் கூடிய அடுக்குமாடி திரையரங்குகளுக்கான கட்டுமானம் துவங்குவதற்கு முன் உள்ள முதற்கட்ட கருத்துருக்கள் மற்றும் கட்டுமானப் பணி முடிந்தபின் உள்ள முடிவு வரைபடங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து வரைபட பரிந்துரையுடன் பொதுப்பணித்துறை வழங்கும் கட்டட உறுதித் தன்மை சான்றினையும் உரிய உரிமம் வழங்கும் அலுவலருக்கு அனுப்பி வைப்பார். விண்ணப்பம் பெறப்பட்ட 30 நாட்களுக்குள் இச்சான்று வழங்கப்படும்.

**பழைய திரையரங்கு கட்டடங்களுக்கு உறுதித்தன்மை சான்று வழங்குதல்**

50 ஆண்டுகளுக்கு மேலான பழைய திரையரங்கு கட்டடங்களுக்கு நேரடி தள ஆய்வுக்குப் பிறகு கட்டட உறுதித்தன்மை சான்று வழங்கப்படும். விண்ணப்பம் பெறப்பட்ட 30 நாட்களுக்குள் இச்சான்று வழங்கப்படும்.

## 6.2. தனியார் கட்டடப் பொறியாளர்களுக்கு மாவட்ட அளவிலான பொறியாளர் பட்டியலில் சேர்ப்பதற்கான நேர்முகத் தேர்வு :–

ஒவ்வொரு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும், உரிய தகுதி மற்றும் அனுபவம் கொண்ட தனியார் பொறியாளர் பெயர்கள் பதிவு செய்வதற்கான பட்டியல் பராமரிக்கப்படுகிறது. இப்பட்டியலில் பதிவு பெற்ற தனியார் பொறியாளர்களின் பணிகளை தனியார் கட்டடங்களுக்கான கட்டட உறுதித்தன்மை சான்றுவழங்குதல் முதலான பணிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பயன்படுத்திக் கொள்கிறார்.

இத்தனியார் பொறியாளர்கள் பட்டியலில் இடம் பெற விரும்பும் பொறியாளரின் விண்ணப்பம், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரால் பெறப்பட்டு, மாவட்ட பொதுப்பணித்துறை கட்டட கண்காணிப்பு பொறியாளர் அவர்களின் பரிந்துரையுடன், முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை அவர்களுக்கு அனுப்பப்படுகிறது. பின்னர், பொதுப்பணித்துறை கண்காணிப்புப் பொறியாளர், திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம் மேற்படி விவரங்களை 30 நாட்களுக்குள் நேர்முகத்தேர்வு நடத்தி சரிபார்த்து அதன் பரிந்துரைகளை பொதுப்பணித்துறை பொறியாளர் குழுமத்தின் ஒப்புதலுக்கு அனுப்புவார். பொறியாளர் குழும ஒப்புதலுக்குப்பின் தனியார் பொறியாளர்களின் பெயர்கள் மாவட்ட ஆட்சித்தலைவரால் மாவட்ட பொறியாளர் பட்டியலில் பதிவு செய்யப்படுகின்றன.

## 6.3. கட்டுமானப் பொருட்கள் / கட்டுமான தொழில்நுட்ப ஒப்புதல்

**மதிப்பீட்டுக் குழு :** அரசாணை (நிலை) எண்.106, வீட்டுவசதித்துறை, நாள் 06.03.1975ன்படி புதிய கட்டுமானப் பொருட்கள் மற்றும் தொழில்நுட்பத்தை மதிப்பிட்டு அறிமுகப்படுத்துவதற்காக பல நிறுவனங்களின் நிபுணர்கள் கொண்ட மதிப்பீட்டுக் குழு அமைக்கப்பட்டது.

இம்மதிப்பீட்டுக் குழுவில் முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை அவர்கள் தலைவராகவும், அண்ணா பல்கலைக்கழகம், இந்திய தொழில்நுட்ப கழகம், இந்திய தரநிர்ணயக் கழகம், கட்டட அமைப்பு பொறியியல் ஆராயச்சி நிலையம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம், தொழில்நுட்ப கல்வி இயக்குநரகம், இராணுவ பொறியியல் துறை, பொறியாளர்கள் கழகம் மற்றும் கட்டுமானவியலார் சங்கம் ஆகிய துறைகள் / நிறுவனங்கள் சார்ந்த வல்லுநர்கள் உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

மேற்படி மதிப்பீட்டுக்குழுவின் கூட்டம், கட்டுமானப் பொருள் உற்பத்தியாளர்களிடமிருந்து ஒப்புதலுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டபின், ஆண்டுக்கு குறைந்தப் பட்சம் 4 கூட்டங்களை திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம் மற்றும் கட்டட ஆராய்ச்சி நிலையம் நடத்துகிறது.

**கட்டுமானப் பொருட்கள் ஒப்புதலுக்கு தேவையான விவரங்கள்**

கட்டுமானப் பொருள் உற்பத்தியாளர் ஒப்புதலுக்கான விண்ணப்பத்துடன் பின்வரும் விவரங்கள் அடங்கிய ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும் :

- உற்பத்தி நிறுவனம் தொடர்பான பொது விவரங்கள், உற்பத்தி மற்றும் விற்பனைக்கான வசதிகள்
- இந்திய தர நிர்ணய கழகத்தின் உரிமம் / பதிவு விவரங்கள்
- பொருட்களின் ஆய்வக அறிக்கைகள்
- பொருட்களின் தொழில் நுட்பக்குறிப்புகள்
- ஏற்கெனவே பெறப்பட்ட ஒப்புதல்கள் / செயல்திறன் சான்றுகள் / கொள்முதல் ஆணைகள்
- கட்டுமானத்தில் பொருட்களை பயன்படுத்துவதற்கான வழிமுறைகள்
- விலை விவரப் பட்டியல்
- துறையால் கேட்கப்படும் ஏனைய விவரங்கள்

மேற்கண்ட விவரங்களுடன் ஒப்புதல் கோரப்படும் ஒவ்வொரு பொருளுக்கும் ரூ.10,000/– வீதம் மதிப்பீட்டு கட்டணங்களை, செயற் பொறியாளர், தமிழக அரசு கட்டட ஆராய்ச்சி நிலையம், பொதுப்பணித்துறை, சென்னை அவர்களுக்கு வரைவோலையாக செலுத்த வேண்டும்.

**கட்டுமான பொருள் ஒப்புதல் சான்று வழங்குவதற்கான அடிப்படை**

மேற்படி மதிப்பீட்டுக்குழு கட்டுமானப் பொருட்களின் உற்பத்திக்கான இந்திய தர நிர்ணயக் கழகத்தின் உரிமம் / மைய அரசு ஆய்வகங்கள் மற்றும் இந்திய தர நிர்ணயக் கழக ஒப்புதல் பெற்ற ஆய்வகங்களின் பரிசோதனை அறிக்கைகள் அடிப்படையில் தரம் ஆய்வு செய்யப்பட்டு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

கட்டுமானப் பொருள் ஒப்புதல் சான்று, கட்டுமானக் குழு கூட்ட நடவடிக்கை ஒப்புதல் பெறப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் குழுவின் உறுப்பினர் செயலாளர் அவர்களால் வழங்கப்பட வேண்டும். இந்த சான்று

3 ஆண்டுகளுக்கு மட்டுமே செல்லத்தக்கது. செல்லுபடிகாலம் முடிவுற்ற பின்னர் ஒரு பொருளுக்கு ரூ.5,000/– வீதம் மதிப்பீட்டுக் கட்டணம் செலுத்தி பொருட்களுக்கான ஒப்புதல் சான்றை புதுப்பித்துக் கொள்ளலாம்.

**6.4. தமிழக அரசு கட்டட ஆராய்ச்சி நிலையத்தினால் மேற்கொள்ளப்படும் ஆய்வகப் பரிசோதனைகள்**

சென்னையில் உள்ள தமிழக அரசு கட்டட ஆராய்ச்சி நிலைய பரிசோதனைக் கூடத்தில், சிமெண்ட், இரும்பு, மணல் மற்றும் கற்காரையின் மீதான தரப்பரிசோதனைகள், இந்திய தர நிர்ணய கழகத்தின் தரநிர்ணய விதிகளின் பிற்சேர்க்கை–III ல் குறிப்பிட்டுள்ள குறைந்த கட்டணம் செலுத்துவதன் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. பொருட்களின் மாதிரிகள் பெறப்பட்ட 7 நாட்களுக்குள் தரப்பரிசோதனை செய்யப்பட்டு, சோதனை முடிவுகள் 3 நாட்களுக்குள் வழங்கப்படுகிறது.

**6.5. கட்டடங்களுக்கான நியாய வாடகைச் சான்றிதழ் வழங்குதல் :**

அரசு அலுவலகங்களுக்கு வாடகைக்கு விடப்படும் தனியார் கட்டடங்களுக்கு நியாய வாடகை சான்று இத்துறையால் வழங்கப்படுகிறது. தொடர்புடைய செயற்பொறியாளர்கள் நியாய வாடகை சான்றிதழ் வழங்க அதிகாரம் பெற்றுள்ளார்கள். விண்ணப்பம் பெறப்பட்ட 15 நாட்களுக்குள் இச்சான்று வழங்கப்படும்.

**6.6. பொதுக்கூட்ட மேடையின் உறுதித்தன்மை சான்றிதழ் வழங்குதல் :**

மிக மிக முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ளும் கூட்டத்தினை ஏற்பாடு செய்பவர்கள் பொதுக்கூட்ட மேடையின் உறுதித்தன்மைச் சான்றிதழை சம்பந்தப்பட்ட செயற்பொறியாளர் மூலம் பெற்றுக்கொள்ளலாம். இச்சான்று கூட்டம் தொடங்குவதற்கு முன்பாக வழங்கப்படும்.

**6.7. பொதுக் கட்டடங்களின் உறுதித் தன்மை குறித்து சான்றிதழ் வழங்குதல் :**

தனியார் பள்ளிக் கட்டடங்கள், கல்லூரிக் கட்டடங்கள், திரையரங்குகள் முதலிய கட்டடங்களின் உரிமையாளர்கள் அவர்களது கட்டடங்களின் உறுதித்தன்மை குறித்த சான்றிதழைப் பெற, பொதுப்பணித்துறை கட்டட அமைப்பின் கண்காணிப்புப் பொறியாளரிடம் பிற்சேர்க்கை–IIல்

குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தை செலுத்தி இந்த சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம். பொதுவாக, இந்த சான்றிதழ் பிற்சேர்க்கை–IIIல் குறிப்பிட்டுள்ளவாறு நூற்று வீதக் கட்டணம் (Centage charges) செலுத்துவதன் அடிப்படையில் வழங்கப்படுகிறது. விண்ணப்பம் பெறப்பட்ட 30 நாட்களுக்குள் இச்சான்று வழங்கப்படும்.

## 6.8. வைப்புத் தொகைப் பணிகள் :

அரசு சார்ந்த, தனியார் துறை, கூட்டுறவு அமைப்புகள் மற்றும் தொழிற்சாலை முதலியவற்றின் கோரிக்கை அடிப்படையில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படும். அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட சதவீதத்தின்படி, ‘‘நூற்று வீதக் கட்டணம்’’ பெற்றுக் கொள்ளப்படும்.

## 6.9. தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005ன்படி தகவல்கள் வழங்குதல்:

தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் தகவல்களை பெற மனுச் செய்வோர் தங்கள் பகுதியில் உள்ள பொதுப்பணித்துறை அலுவலர்களை அணுகலாம். **‘‘பொதுத் தகவல் அலுவலர்கள்’’** மற்றும் **‘‘மேல்முறையீட்டு அலுவலர்கள்’’** குறித்த பட்டியல் பிற்சேர்க்கை–IV-ல் அளிக்கப்பட்டுள்ளது.

**எடப்பாடி கே. பழனிசாமி**
**பொதுப்பணி, நெடுஞ்சாலை மற்றும்**
**சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்**

## பிற்சேர்க்கை–I

## பொதுப்பணித்துறை, கட்டட அமைப்பு அலுவலர்களின் விவரம் தலைமைப் பொறியாளர்கள் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர்கள்

| வ. எண் | அலுவலகம் | முகவரி | தொலைபேசி எண் |
|---|---|---|---|
| 1 | முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம் சென்னை | பொதுப்பணித்துறை வளாகம், சேப்பாக்கம், சென்னை–5 | 044-28525367 |
| 2 | தலைமைப் பொறியாளர் (கட்டடம்), திருச்சி மண்டலம் திருச்சி | கண்டோன்மண்ட், திருச்சி–620 001 | 0431-2418722 |
| 3 | தலைமைப் பொறியாளர் (கட்டடம்), மதுரை மண்டலம் மதுரை | பொதுப்பணித்துறை வளாகம், தல்லாக்குளம் மதுரை 625 002 | 0452 - 2530862 |
| 4 | இணைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம் சென்னை அலுவலகம் | பொதுப்பணித்துறை வளாகம், சேப்பாக்கம், சென்னை–5 | 044-28413725<br>044-28410402<br>Ext. 152 |
| 5 | கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., மின் வட்டம், சென்னை | பொதுப்பணித்துறை வளாகம், சேப்பாக்கம், சென்னை–5 | 044-28410402<br>Ext. 303 |
| 6 | துணைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), (ஒருங்கிணைப்பு அதிகாரி – முதலமைச்சர் தனிப்பிரிவு மற்றும் பொது தகவல் அலுவலர் –தகவல் அறியும் உரிமைச் சட்டம்) | பொதுப்பணித்துறை வளாகம், சேப்பாக்கம், சென்னை–5 | 044-28410402<br>Ext. 161 |
| 7 | கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், மருத்துவப் பணிகள், சென்னை | பொதுப்பணித்துறை வளாகம், சேப்பாக்கம், சென்னை–5 | 044-28545501<br>044-28410402<br>Ext. 121 |
| 8 | கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், சென்னை | பொதுப்பணித்துறை வளாகம், சேப்பாக்கம், சென்னை–5 | 044-28550446<br>044-28410402<br>Ext. 290 |

| வ. எண் | அலுவலகம் | முகவரி | தொலைபேசி எண் |
|---|---|---|---|
| 9 | கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம் சென்னை | பொதுப்பணித்துறை வளாகம், சேப்பாக்கம், சென்னை–5 | 044-28410402 Ext. 276 |
| 10 | கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், வேலூர் | பொதுப்பணித்துறை வளாகம் வேலூர்–632 001. | 0416-2221316 |
| 11 | கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், சேலம் | பொதுப்பணித்துறை வளாகம் சேலம்–7. | 0427-2416732 |
| 12 | கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், கோயமுத்தூர் | டவுன் ஹால், பொதுப்பணித்துறை வளாகம், கோயமுத்தூர் | 0422-2302611 |
| 13 | கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருச்சி | கண்டோன்மண்ட், திருச்சி–620 001 | 0431-2462604 |
| 14 | கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், மருத்துவப் பணிகள், திருச்சி | கண்டோன்மண்ட், திருச்சி–620 001 | 0431-2410689 |
| 15 | கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், மதுரை | பொதுப்பணித்துறை வளாகம், தல்லாக்குளம் மதுரை 625 002. | 0452-2530817 |
| 16 | கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், மருத்துவப் பணிகள், மதுரை | பொதுப்பணித்துறை வளாகம், தல்லாக்குளம் மதுரை 625 002. | 0452-2530057 |
| 17 | கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருநெல்வேலி | பொதுப்பணித்துறை வளாகம், திருநெல்வேலி 627 002 | 0462-2576711 |
| 18 | கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., மின் வட்டம், திருச்சி | கண்டோன்மண்ட், திருச்சி–620 001 | 0431-2418144 |
| 19 | கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., மின் வட்டம், மதுரை | பொதுப்பணித்துறை வளாகம், தல்லாக்குளம் மதுரை 625 002. | 0452-2530757 |

## பிற்சேர்க்கை – II

### தனியார் கட்டடங்களுக்கான, கட்டட உறுதித் தன்மை சான்று வழங்கும் சேவைக்கான கட்டண விவரம்

(அரசாணை நிலை எண்.181, பொதுப்பணித் (ஜி2) துறை, நாள் 16.05.2003–ன்படி)

| வ. எண் | சோதனை மற்றும் நோக்கம் | கட்டணம் (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | 50 ஆண்டுகள் மற்றும் அதற்குக் குறைவான ஆண்டுகள் பழமையான தனியார் கட்டடங்களை ஆய்வு செய்து, மூன்று ஆண்டுகளுக்கான கட்டட உறுதித் தன்மை சான்று வழங்குதல் | ஒரு சதுர மீட்டருக்கு ரூ.10 (குறைந்தபட்சம்), ஒரு கட்டடத்திற்கு ரூ.5000/– |
| 2 | 50 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தனியார் கட்டடங்கள் ஆய்வு செய்து ஓராண்டு உறுதித் தன்மை சான்று வழங்குதல். | ஒரு சதுரமீட்டருக்கு ரூ.5 (குறைந்தபட்சம்) ஒரு கட்டடத்திற்கு ரூ.5000/– |
| 3 | சீர்குலைந்த தனியார் கட்டடங்களை ஆய்வு செய்தல் மற்றும் அதனை சீர்படுத்தும் பரிந்துரைகள் வழங்குதல். | ரூ.5,000/– |

## பிற்சேர்க்கை – III

### அரசு / அரசு சார்ந்த / பொதுத்துறை / தனியார் நிறுவனங்களுக்கு சொந்தமான கட்டடங்களில் சேதம் ஏற்படுத்தாமல் சோதனை செய்வதற்கு சேவைக் கட்டண விவரங்கள்

(அரசாணை நிலை எண்.97, பொதுப்பணித் (ஜி1) துறை, நாள் 03.06.2011–ன்படி)

| வ. எண் | சோதனை மற்றும் நோக்கம் | கருவி | கட்டணம் (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | சராசரி எதிர்வீச்சு எண் தீர்மானிப்பது மற்றும் கட்டுமான அங்கங்களில் மேற்பரப்பு அருகில் கற்காரைத் திறன் கண்டுபிடிப்பது. | எண்முறை எதிர்வீச்சு சுத்தி (Digital Rebound Hammer) | ஒரு புள்ளிக்கு ரூ.50 வீதம் |
| 2 | கற்காரை நன்னிலை தீர்மானிக்க மற்றும் கற்காரையின் உள்ளே இருக்கும் தேன்கூட்டுக் கறைபாடு, வெற்றிடம் மற்றும் விரிசல் அளப்பது | கேளாஒலித்துடிப்பு வேகக் கருவி (Ultrasonic Pulse Velocity) | ஒரு புள்ளிக்கு ரூ.75 வீதம் |
| 3 | கற்காரையின் உள்ளே கம்பி வலுவூட்டிகளின் இருப்பிடம் தீர்மானிக்க | வலுக்கம்பி விவர வருடி (Rebar Data Scan) | ஒரு புள்ளிக்கு ரூ.75 வீதம் |
| 4 | முன்வார்ப்பு கனச்சதுர கற்காரையின் திறன் தீர்மானிப்பது | அழுக்க சோதனைக் கருவி (Compression Testing Machine) | மூன்று கனச்சதுர வார்ப்புகளுக்கு ரூ.150/– |
| 5 | கட்டட கட்டுமான அங்கங்களின் அமுக்கத்திறன் தீர்மானிப்பது | மாதிரி வெட்டிக் கருவி மற்றும் அமுக்க சோதனை கருவி (Core Cutter and Compression Testing Machine) | ஒரு மாதிரிக்கு ரூ.900 வீதம் |

## பிற்சேர்க்கை – IV

## பொதுப்பணித்துறை, கட்டட அமைப்பு

## தகவல் பெறும் உரிமை சட்டம் 2005
## பொது தகவல் அலுவலர் மற்றும் மேல் முறையீட்டு அலுவலர் விவரங்கள்

| வ. எண் | அலுவலகத்தின் பெயர்/பதவி/அலுவலர் பதவி | எஸ்டிடி | தொலை பேசி | அலுவலக முகவரி |
|---|---|---|---|---|
| 1 | முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம் சென்னை–5<br>1. பொ.த.அ / துணைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்)<br>2. மே.மு.அ / இணைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) | 044<br><br>044 | 28410402<br>Ext 161<br><br>28413725 | முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம் சென்னை, காமராஜர் சாலை, சேப்பாக்கம், சென்னை.5 |
| | **கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சென்னை–5** | | | |
| 1 | கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து.,<br>கட்டட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம்,<br>சென்னை<br>1. பொ.த.அ / துணைக் கண்காணிப்புப் பொறியாளர்<br>2. மே.மு.அ / கண்காணிப்புப் பொறியாளர் | 044 | 28410402<br>Ext 123<br><br>Ext 121 | கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம், காமராஜர் சாலை, சேப்பாக்கம் ,சென்னை –5 |
| 2 | செயற் பொறியாளர், பொ.ப.து.,<br>வட மாநகர கோட்டம், சென்னை –5<br>1. பொ.த.அ / தொழிற்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ /செயற்பொறியாளர் | 044 | 28410402<br>Ext.125<br><br>28516568 | செயற் பொறியாளர், பொதுப்பணித்துறை, வட மாநகர கோட்டம், காமராஜர் சாலை, சேப்பாக்கம், சென்னை –5 |
| 3 | செயற் பொறியாளர், பொ.ப.து.,<br>தென் மாநகர கோட்டம், சென்னை –5<br>1. பொ.த.அ / தொழிற்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 044 | 28410402<br>Extn.344<br><br>28517520 | செயற் பொறியாளர், பொதுப்பணித்துறை, தென் மாநகர கோட்டம், காமராஜர் சாலை, சேப்பாக்கம், சென்னை –5 |

| வ. எண் | அலுவலகத்தின் பெயர்/பதவி/அலுவலர் பதவி | எஸ்டிடி | தொலை பேசி | அலுவலக முகவரி |
|---|---|---|---|---|
| 4 | செயற்பொறியாளர், பொ.ப.து., கட்டட (கட்டுமானம்) கோட்டம்–1, சேப்பாக்கம், சென்னை –5<br>1. பொ.த.அ / தொழிற்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 044 | 28410402<br><br>Ext 293 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம்) கோட்டம்–1, சேப்பாக்கம், சென்னை –5 |
| 5 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம்& பராமரிப்பு) கோட்டம் காஞ்சிபுரம்<br>1. பொ.த.அ/தொழிற்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 044 | 27238672 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், காஞ்சிபுரம்–631 501 |
| 6 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம் திருவள்ளூர்<br>1. பொ.த.அ./தொழிற்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 044 | 27661174 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், திருவள்ளூர்–601 201 |
| | **கட்டிட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், மருத்துவப் பணிகள், சென்னை –5** | | | |
| 1 | கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம், மருத்துவப் பணிகள், சென்னை –5<br>1. பொ.த.அ /உதவி செயற் பொறியாளர்<br>2. மே.மு.அ /கண்காணிப்புபொறியாளர் | 044<br><br>044 | 28550446<br>Extn.292<br><br>28550446 | கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம், மருத்துவப் பணிகள், சென்னை –5 |
| 2 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம்) கோட்டம் –1, மருத்துவப் பணிகள், சென்னை –5<br>1. பொ.த.அ/ உதவி செயற் பொறியாளர்<br>2. மே.மு.அ /செயற்பொறியாளர் | 044 | 28410402<br><br>Extn.294<br>Extn. 293 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம்) கோட்டம் –1, மருத்துவப் பணிகள், சென்னை –5 |

| வ. எண் | அலுவலகத்தின் பெயர்/பதவி/அலுவலர் பதவி | எஸ்டிடி | தொலை பேசி | அலுவலக முகவரி |
|---|---|---|---|---|
| 3 | செயற்பொறியாளர்<br>பொதுப்பணித்துறை,<br>கட்டிட (கட்டுமானம்) கோட்டம் –2,<br>மருத்துவப் பணிகள், சென்னை –5<br>1. பொ.த.அ/ உதவி செயற் பொறியாளர்<br>2. மே.மு.அ /செயற்பொறியாளர் | 044 | 28410402<br><br>Extn. 180<br>Extn. 244 | செயற்பொறியாளர்<br>பொதுப்பணித்துறை,<br>கட்டிட (கட்டுமானம்) கோட்டம் –2, மருத்துவப் பணிகள்,<br>சென்னை –5 |
| 4 | செயற்பொறியாளர்<br>பொதுப்பணித்துறை,<br>கட்டிட (கட்டுமானம்) கோட்டம் –3,<br>மருத்துவப் பணிகள், சென்னை –5<br>1. பொ.த.அ / உதவி செயற் பொறியாளர்<br>2. மே.மு.அ /செயற்பொறியாளர் | 044 | 28410402<br><br>Extn.300<br>Extn.299 | செயற்பொறியாளர்<br>பொதுப்பணித்துறை,<br>கட்டிட (கட்டுமான) கோட்டம் –3, மருத்துவப் பணிகள்,<br>சென்னை –5 |
| 5 | செயற்பொறியாளர்<br>பொதுப்பணித்துறை,<br>கட்டிட (பராமரிப்பு) கோட்டம் ,<br>மருத்துவப் பணிகள், சென்னை –5<br>1. பொ.த.அ / உதவி செயற் பொறியாளர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 044 | 27661174 | செயற்பொறியாளர்<br>பொதுப்பணித்துறை,<br>கட்டிட (பராமரிப்பு) கோட்டம், மருத்துவப் பணிகள்,<br>சென்னை –5 |
| 6 | செயற்பொறியாளர்<br>பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம்,<br>மருத்துவப் பணிகள், வேலூர்<br>1. பொ.த.அ / உதவி செயற் பொறியாளர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 0416 | 2246966 | செயற்பொறியாளர்<br>பொதுப்பணித்துறை,<br>கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம் ,<br>மருத்துவப் பணிகள்,<br>வேலூர் |
| | **கட்டிட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், வேலூர்** | | | |
| 1 | கண்காணிப்புபொறியாளர்<br>பொதுப்பணித்துறை,<br>கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம்<br>வேலூர் –1<br>1. பொ.த.அ / துணைக் கண்காணிப்புப் பொறியாளர்<br>2. மே.மு.அ / கண்காணிப்புபொறியாளர் | 0416 | 2221316 | கண்காணிப்புபொறியாளர் அலுவலகம்<br>பொதுப்பணித்துறை,<br>கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம் –<br>வேலூர் –1 |

| வ. எண் | அலுவலகத்தின் பெயர்/பதவி/அலுவலர் பதவி | எஸ்டிடி | தொலை பேசி | அலுவலக முகவரி |
|---|---|---|---|---|
| 2 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம் வேலூர் –4<br>1. பொ.த.அ / தொழிற்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 0416 | 2220113 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம் – வேலூர் –4 |
| 3 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம் திருவண்ணாமலை<br>1. பொ.த.அ / முதுநிலை வரைதொழில் அலுவலர்<br>2. மே.மு.அ /செயற்பொறியாளர் | 04175 | 236068 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம் – திருவண்ணாமலை |
| 4 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம் கடலூர்<br>1. பொ.த.அ / தொழிற்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 04142 | 230274 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் பராமரிப்பு) கோட்டம் – கடலூர் |
| 5 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், விழுப்புரம்<br>1 . பொ.த.அ / தொழிற்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 04146 | 226793 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் பராமரிப்பு) கோட்டம், விழுப்புரம் |
| | **மின்வட்டம் , சென்னை** | | | |
| 1 | கண்காணிப்புபொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, மின்வட்டம், சென்னை –5<br>1. பொ.த.அ / உதவி பொறியாளர்<br>2. மே.மு.அ / கண்காணிப்புப் பொறியாளர் | 044 | 28410402<br>Ext. 305<br>Ext. 303 | கண்காணிப்புபொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, மின்வட்டம், சென்னை –5 |

| வ. எண் | அலுவலகத்தின் பெயர்/பதவி/அலுவலர் பதவி | எஸ்டிடி | தொலை பேசி | அலுவலக முகவரி |
|---|---|---|---|---|
| 2 | மின் பொறியாளர்<br>பொதுப்பணித்துறை,<br>மின் கோட்டம் – மருத்துவப் பணிகள், சென்னை–5<br>1.பொ.த.அ /உதவி பொறியாளர் (மின்)<br>2. மே.மு.அ /செயற்பொறியாளர் (மின்) | 044 | 28410402<br><br>Ext. 308<br>Ext. 305 | மின் பொறியாளர்<br>அலுவலகம்<br>பொதுப்பணித்துறை,<br>மின் கோட்டம் –<br>மருத்துவப் பணிகள்,<br>சென்னை–5 |
| 3 | மின் பொறியாளர்<br>பொதுப்பணித்துறை,<br>மின் கோட்டம்– 1, சென்னை –5<br>1. பொ.த.அ/ உதவி பொறியாளர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 044 | 28410402<br><br>Ext. 141<br>Ext. 136 | மின் பொறியாளர்<br>அலுவலகம்<br>பொதுப்பணித்துறை,<br>மின் கோட்டம் – 1,<br>சென்னை –5 |
| 4 | மின் பொறியாளர்<br>பொதுப்பணித்துறை,<br>மின் கோட்டம் – 2, சென்னை –5<br>1. பொ.த.அ/ செயற்பொறியாளர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 044 | 28410402 | மின் பொறியாளர்<br>அலுவலகம்<br>பொதுப்பணித்துறை,<br>மின் கோட்டம் – 2,<br>சென்னை –5 |
| | **கட்டிட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், திருச்சி** | | | |
| 1 | கண்காணிப்புபொறியாளர்<br>பொதுப்பணித்துறை, கட்டிட<br>(கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம்<br>திருச்சி<br>1. பொ.த.அ / துணைக் கண்காணிப்புபொறியாளர்<br>2. மே.மு.அ / கண்காணிப்புபொறியாளர் | 0431 | 2462604 | கண்காணிப்புபொறியாளர்<br>அலுவலகம்<br>பொதுப்பணித்துறை,<br>கட்டிட (கட்டுமானம் (ம)<br>பராமரிப்பு) வட்டம்,<br>திருச்சி–620 001 |
| 2 | செயற்பொறியாளர்<br>பொதுப்பணித்துறை, கட்டிட<br>(கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம்<br>திருச்சி<br>1. பொ.த.அ /தொழிற்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 0431 | 2771632 | செயற்பொறியாளர்<br>அலுவலகம்<br>பொதுப்பணித்துறை,<br>கட்டிட (கட்டுமானம் (ம)<br>பராமரிப்பு) கோட்டம்,<br>திருச்சி–620 001 |
| 3 | செயற்பொறியாளர்<br>பொதுப்பணித்துறை, கட்டிட<br>(கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம்<br>புதுக்கோட்டை<br>1. பொ.த.அ / வரைத் தொழில் அலுவலர்<br>2. மே.மு.அ / உதவி செயற்பொறியாளர் | 04322 | 221596 | செயற்பொறியாளர்<br>அலுவலகம்<br>பொதுப்பணித்துறை,<br>கட்டிட (கட்டுமானம் (ம)<br>பராமரிப்பு) கோட்டம்,<br>புதுக்கோட்டை |

| வ. எண் | அலுவலகத்தின் பெயர்/பதவி/அலுவலர் பதவி | எஸ்டிடி | தொலை பேசி | அலுவலக முகவரி |
|---|---|---|---|---|
| 4 | செயற்பொறியாளர்<br>பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் பராமரிப்பு) கோட்டம் – தஞ்சாவூர்<br>**1.** பொ.த.அ / தொழிற்நுட்ப நேர்முக அலுவலர்<br>**2.** மே.மு.அ / செயற்பொறியாளர் | 04362 | 230323 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம் – தஞ்சாவூர் |
| 5 | செயற்பொறியாளர் ,<br>பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம் நாகப்பட்டிணம்<br>**1.** பொ.த.அ / முதுநிலை வரைத்தொழில் அலுவலர்<br>**2.** மே.மு.அ / செயற்பொறியாளர் | 04365 | 220366 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம் – நாகப்பட்டிணம் |
| | **கட்டிட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், மருத்துவப் பணிகள், திருச்சி** | | | |
| 1 | கண்காணிப்புபொறியாளர்<br>பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம், மருத்துவப் பணிகள், திருச்சி<br>**1.** பொ.த.அ / துணைக்கண்காணிப்புப் பொறியாளர்<br>**2.** மே.மு.அ / கண்காணிப்புபொறியாளர் | 0431 | 2418722 | கண்காணிப்புபொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம், மருத்துவப் பணிகள், திருச்சி |
| 2 | செயற்பொறியாளர்<br>பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், மருத்துவப் பணிகள், திருச்சி<br>**1.** பொ.த.அ / முதுநிலை வரைத்தொழில் அலுவலர்<br>**2.** மே.மு.அ / செயற்பொறியாளர் | 0431 | 2466363 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம் மருத்துவப் பணிகள், திருச்சி |
| 3 | செயற்பொறியாளர்<br>பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், மருத்துவப் பணிகள், திருப்பூர்<br>**1.** பொ.த.அ / முதுநிலை வரைத்தொழில் அலுவலர்<br>**2.** மே.மு.அ / செயற்பொறியாளர் | 0421 | 2472277 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், மருத்துவப் பணிகள், திருப்பூர் |

| வ. எண் | அலுவலகத்தின் பெயர்/பதவி/அலுவலர் பதவி | எஸ்டிடி | தொலை பேசி | அலுவலக முகவரி |
|---|---|---|---|---|
| 4 | செயற்பொறியாளர்<br>பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், மருத்துவப் பணிகள், திருவாரூர்<br>1. பொ.த.அ / முதுநிலை வரைதொழில் அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 04366 | 242472 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், மருத்துவப் பணிகள், திருவாரூர் |
| 5 | செயற்பொறியாளர்<br>பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், மருத்துவப் பணிகள், சேலம்<br>1. பொ.த.அ / முதுநிலை வரைதொழில் அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | | | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், மருத்துவப் பணிகள், சேலம். |
| | **கட்டிட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேலம்** | | | |
| 1 | கண்காணிப்புபொறியாளர்<br>பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம், சேலம்<br>1. பொ.த.அ / துணைக்கண்காணிப்புப் பொறியாளர்<br>2. மே.மு.அ / கண்காணிப்புப் பொறியாளர் | 0427 | 2416732 | கண்காணிப்புபொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம் –சேலம் |
| 2 | செயற்பொறியாளர்<br>பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், சேலம்<br>1. பொ.த.அ / முதுநிலை வரைதொழில் அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 0427 | 2413116 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், சேலம் |
| 3 | செயற்பொறியாளர்<br>பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், நாமக்கல்<br>1. பொ.த.அ /முதுநிலை வரைதொழில் அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 04286 | 230966 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், நாமக்கல் |

| வ. எண் | அலுவலகத்தின் பெயர்/பதவி/அலுவலர் பதவி | எஸ்டிடி | தொலை பேசி | அலுவலக முகவரி |
|---|---|---|---|---|
| 4 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், அரியலூர் **1.** பொ.த.அ /முதுநிலை வரைதொழில் அலுவலர் **2.** மே.மு.அ / செயற்பொறியாளர் | 04329 | 224550 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், அரியலூர் |
| 5 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் பராமரிப்பு) கோட்டம், தர்மபுரி **1.** பொ.த.அ / முதுநிலை வரைதொழில் அலுவலர் **2.** மே.மு.அ / செயற்பொறியாளர் | 04342 | 230161 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் பராமரிப்பு) கோட்டம், தர்மபுரி |
| | **கட்டிட (கட்டுமான& பராமரிப்பு) வட்டம், கோயமுத்தூர்** | | | |
| 1 | கண்காணிப்புபொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம் கோயமுத்தூர் **1.** பொ.த.அ / துணை கண்காணிப்புப் பொறியாளர் **2.** மே.மு.அ / கண்காணிப்புப் பொறியாளர் | 0422 | 2302611 | கண்காணிப்புபொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம் – கோயமுத்தூர் |
| 2 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், ஈரோடு–**11** **1.** பொ.த.அ / தொழிற்நுட்ப நேர்முக அலுவலர் **2.** மே.மு.அ / செயற்பொறியாளர் | 0424 | 2265650 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், ஈரோடு–**11** |
| 3 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், கோயம்புத்தூர் **1.**பொ.த.அ / தொழிற்நுட்ப நேர்முக அலுவலர் **2.** மே.மு.அ / செயற்பொறியாளர் | 0422 | 2395521 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், கோயம்புத்தூர் |

| வ. எண் | அலுவலகத்தின் பெயர்/பதவி/அலுவலர் பதவி | எஸ்டிடி | தொலை பேசி | அலுவலக முகவரி |
|---|---|---|---|---|
| 4 | செயற்பொறியாளர்<br>பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், கரூர்<br>1.பொ.த.அ / தொழிற்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 04324 | 261152 | செயற்பொறியாளர் அலுவலகம்<br>பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், கரூர் |
| 5 | செயற்பொறியாளர்<br>பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், உதகமண்டலம்<br>1. பொ.த.அ / தொழிற்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 0423 | 2450123 | செயற்பொறியாளர் அலுவலகம்<br>பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், உதகமண்டலம்–643 001 |
| | **மின் வட்டம் , திருச்சி** | | | |
| 1 | கண்காணிப்புபொறியாளர்<br>பொதுப்பணித்துறை, மின்வட்டம், திருச்சி<br>1. பொ.த.அ / தொழில்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / கண்காணிப்புப் பொறியாளர் (மின்) | 0431 | 2418144 | கண்காணிப்புபொறியாளர் அலுவலகம்<br>பொதுப்பணித்துறை, மின்வட்டம், திருச்சி |
| 2 | மின் பொறியாளர்<br>பொதுப்பணித்துறை, மின் கோட்டம் – கோயம்புத்தூர்<br>1. பொ.த.அ / கண்காணிப்பாளர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 0422 | 2382997 | மின் பொறியாளர் அலுவலகம்<br>பொதுப்பணித்துறை, மின் கோட்டம் – கோயம்புத்தூர் |
| 3 | மின் பொறியாளர்<br>பொதுப்பணித்துறை, மின் கோட்டம், மருத்துவப் பணிகள், திருச்சி<br>1. பொ.த.அ /உதவிப் பொறியாளர்<br>2. மே.மு.அ /செயற்பொறியாளர் (மின்) | 0431 | 2412797 | மின் பொறியாளர் அலுவலகம்<br>பொதுப்பணித்துறை, மின் கோட்டம், மருத்துவப் பணிகள், திருச்சி |
| 4 | மின் பொறியாளர்<br>பொதுப்பணித்துறை, மின் கோட்டம் – சேலம்<br>1. பொ.த.அ / உதவி செயற்பொறியாளர் (மின்)<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 0427 | 2418839 | மின் பொறியாளர் அலுவலகம்<br>பொதுப்பணித்துறை, மின் கோட்டம் –சேலம். |

| வ. எண் | அலுவலகத்தின் பெயர்/பதவி/அலுவலர் பதவி | எஸ்டிடி | தொலை பேசி | அலுவலக முகவரி |
|---|---|---|---|---|
| | **கட்டிட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், மதுரை** | | | |
| 1 | கண்காணிப்புபொறியாளர்,<br>பொதுப்பணித்துறை, கட்டிட<br>(கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம்<br>மதுரை<br>1. பொ.த.அ / துணை கண்காணிப்புப் பொறியாளர்<br>2. மே.மு.அ ./ கண்காணிப்புப் பொறியாளர் | 0452 | 2530817 | கண்காணிப்புபொறியாளர்<br>அலுவலகம்<br>பொதுப்பணித்துறை,<br>கட்டிட (கட்டுமானம் (ம)<br>பராமரிப்பு) வட்டம் மதுரை |
| 2 | செயற்பொறியாளர்<br>பொதுப்பணித்துறை, கட்டிட<br>(கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம்,<br>மதுரை<br>1. பொ.த.அ / தொழில்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 0452 | 2530718 | செயற்பொறியாளர்<br>அலுவலகம்<br>பொதுப்பணித்துறை,<br>கட்டிட (கட்டுமானம் (ம)<br>பராமரிப்பு) கோட்டம்,<br>மதுரை |
| 3 | செயற்பொறியாளர்<br>பொதுப்பணித்துறை, கட்டிட<br>(கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம்,<br>இராமநாதபுரம்<br>1.பொ.த.அ / தொழில்நுட்ப நேர்முக அலுவலர்<br>2.மே.மு.அ ./ செயற்பொறியாளர் | 04567 | 230728 | செயற்பொறியாளர்<br>அலுவலகம்<br>பொதுப்பணித்துறை,<br>கட்டிட (கட்டுமானம் (ம)<br>பராமரிப்பு) கோட்டம்,<br>இராமநாதபுரம் |
| 4 | செயற்பொறியாளர்,<br>பொதுப்பணித்துறை, கட்டிட<br>(கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம்,<br>திண்டுக்கல்<br>1. பொ.த.அ / முதுநிலை வரைத்தொழில் அலுவலர்<br>2. மே.மு.அ / தொழில்நுட்ப நேர்முக அலுவலர் | 0451 | 2427432 | செயற்பொறியாளர்<br>அலுவலகம்<br>பொதுப்பணித்துறை,<br>கட்டிட (கட்டுமானம் (ம)<br>பராமரிப்பு) கோட்டம்,<br>திண்டுக்கல் |
| 5 | செயற்பொறியாளர் ,<br>பொதுப்பணித்துறை, கட்டிட<br>(கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம்,<br>தேனி<br>1. பொ.த.அ / முதுநிலை வரைத்தொழில் அலுவலர்<br>2. மே.மு.அ / தொழிற்நுட்ப நேர்முக அலுவலர் | 04546 | 260429 | செயற்பொறியாளர்<br>அலுவலகம்<br>பொதுப்பணித்துறை,<br>கட்டிட (கட்டுமானம் (ம)<br>பராமரிப்பு) கோட்டம்,<br>தேனி |

| வ. எண் | அலுவலகத்தின் பெயர்/பதவி/அலுவலர் பதவி | எஸ்டிடி | தொலை பேசி | அலுவலக முகவரி |
|---|---|---|---|---|
| | **கட்டிட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், மருத்துவப் பணிகள், மதுரை** | | | |
| 1 | கண்காணிப்புபொறியாளர் , பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம், மருத்துவப் பணிகள், மதுரை<br>1. பொ.த.அ / துணைகண்காணிப்புப் பொறியாளர்<br>2. மே.மு.அ / கண்காணிப்புப் பொறியாளர் | 0452 | 2530057 | கண்காணிப்புபொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம், மருத்துவப் பணிகள், மதுரை |
| 2 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், மருத்துவப் பணிகள், மதுரை<br>1. பொ.த.அ / தொழிற்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 0452 | 2530520 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், மருத்துவப் பணிகள், மதுரை |
| 3 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், மருத்துவப் பணிகள், சிவகங்கை<br>1. பொ.த.அ / தொழிற்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 04575 | 240871 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், மருத்துவப் பணிகள், சிவகங்கை |
| 4 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், மருத்துவப் பணிகள், திருநெல்வேலி<br>1. பொ.த.அ / முதுநிலை வரைதொழில் அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 0462 | 2581311 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், மருத்துவப் பணிகள், திருநெல்வேலி–11 |
| | **கட்டிட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், திருநெல்வேலி** | | | |
| 1 | கண்காணிப்புபொறியாளர் , பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம் – திருநெல்வேலி<br>1.. பொ.த.அ / துணைகண்காணிப்புப் பொறியாளர்<br>2. மே.மு.அ / கண்காணிப்புப் பொறியாளர் | 0462 | 2576711 | கண்காணிப்புபொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம், திருநெல்வேலி–627 002 |

| வ. எண் | அலுவலகத்தின் பெயர்/பதவி/அலுவலர் பதவி | எஸ்டிடி | தொலை பேசி | அலுவலக முகவரி |
|---|---|---|---|---|
| 2 | செயற்பொறியாளர்<br>பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், தூத்துக்குடி<br>1 . பொ.த.அ / தொழில் நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 0461 | 2325039 | செயற்பொறியாளர் அலுவலகம்<br>பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், தூத்துக்குடி |
| 3 | செயற்பொறியாளர்<br>பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், திருநெல்வேலி<br>1. பொ.த.அ / தொழில் நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 0462 | 2585555 | செயற்பொறியாளர் அலுவலகம்<br>பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், திருநெல்வேலி–627 002 |
| 4 | செயற்பொறியாளர்<br>பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், விருதுநகர்<br>1. பொ.த.அ / தொழில் நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 04562 | 244711 | செயற்பொறியாளர் அலுவலகம்<br>பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், கோட்டம், விருதுநகர் |
| 5 | செயற்பொறியாளர்<br>பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், நாகர்கோவில்<br>1. பொ.த.அ . / தொழில் நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 04652 | 278330 | செயற்பொறியாளர் அலுவலகம்<br>பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், மாவட்ட ஆட்சியரக வளாகம், நாகர்கோவில்–629 002 |
| | **திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம், சென்னை –5** | | | |
| 1 | கண்காணிப்புபொறியாளர்<br>பொதுப்பணித்துறை, கட்டிட (திட்டம் மற்றும் வடிவமைப்பு) வட்டம் – சென்னை –5<br>1. பொ.த.அ / உதவிசெயற்பொறியாளர்<br>2. மே.மு.அ / கண்காணிப்புப் பொறியாளர் | 044 | 28410402<br>Extn. 277<br>Extn. 276 | கண்காணிப்புபொறியாளர் அலுவலகம்<br>பொதுப்பணித்துறை, கட்டிட (திட்டம் மற்றும் வடிவமைப்பு) வட்டம் – சென்னை –5 |

| வ. எண் | அலுவலகத்தின் பெயர்/பதவி/அலுவலர் பதவி | எஸ்டிடி | தொலை பேசி | அலுவலக முகவரி |
|---|---|---|---|---|
| 2 | செயற்பொறியாளர்<br>பொதுப்பணித்துறை,<br>தமிழக அரசு கட்டட ஆராய்ச்சி நிலையம்,<br>தரமணி, சென்னை–113<br>1. பொ.த.அ . / உதவிசெயற்பொறியாளர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | | | செயற்பொறியாளர்<br>அலுவலகம்<br>பொதுப்பணித்துறை,<br>தமிழக அரசு கட்டட ஆராய்ச்சி நிலையம்,<br>தரமணி,<br>சென்னை–113 |
| | **மின் வட்டம் , மதுரை** | | | |
| 1 | கண்காணிப்புபொறியாளர்<br>பொதுப்பணித்துறை,<br>மின் வட்டம், மதுரை<br>1. பொ.த.அ / தொழில்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / கண்காணிப்புப் பொறியாளர் | 0452 | 2530757 | கண்காணிப்புபொறியாளர்<br>அலுவலகம்<br>பொதுப்பணித்துறை,<br>மின்வட்டம், மதுரை |
| 2 | மின் பொறியாளர்<br>பொதுப்பணித்துறை,<br>மின் கோட்டம் –மதுரை<br>1. பொ.த.அ / உதவி செயற்பொறியாளர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 0452 | 2530757 | மின் பொறியாளர்<br>அலுவலகம்<br>பொதுப்பணித்துறை,<br>மின் கோட்டம் –மதுரை |
| 3 | மின் பொறியாளர்<br>பொதுப்பணித்துறை,<br>மின் கோட்டம், மருத்துவப் பணிகள், மதுரை<br>1. பொ.த.அ / உதவி செயற்பொறியாளர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 0452 | 2520757 | மின் பொறியாளர்<br>அலுவலகம்<br>பொதுப்பணித்துறை,<br>மின் கோட்டம், மருத்துவப் பணிகள், மதுரை |

**சுருக்க விபரம் :**

பொ.த.அ –பொதுத் தகவல் அலுவலர்
மே.மு.அ – மேல்முறையீட்டு அலுவலர்
இ.த.பொ (க) – இணை தலைமைப் பொறியாளர் (கட்டடம்)
து.த.பொ(க) – துணைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்)
க.பொ – கண்காணிப்புப் பொறியாளர்
செ.பொ – செயற் பொறியாளர்
து.க.பொ – துணை கண்காணிப்புப் பொறியாளர்
தொ.நு.அ – தொழில்நுட்ப நேர்முக அலுவலர்
உ.செ.பொ – உதவி செயற்பொறியாளர்
உ.பொ – உதவி பொறியாளர்
இ.பொ – இளம் பொறியாளர்
த.வ.அ – தலைமை வரைதொழில் அலுவலர்
மு.தொ.அ – முதுநிலை வரைதொழில் அலுவலர்
வ.தொ.அ – வரைதொழில் அலுவலர்
கோ.க – கோட்டக் கணக்கர்
க.கா – கண்காணிப்பாளர்